சுருக்கம்

பள்ளிக் கல்வி – இடைநிலை பள்ளி விடுப்புச் சான்றிதழ் / மேல்நிலை பொதுத் தேர்வு எழுதும் மாற்றுத் திறனாளிகளின் குறைபாடுகளுக்கேற்ப பல்வேறு சலுகைகள் வழங்கி அதற்கான நிபந்தனைகளை வகுத்து ஆணையிடப்பட்டது – திருத்தம் வெளியிடப்படுகிறது.

---

பள்ளிக்கல்வி (வி1) துறை

அரசாணை (நிலை) எண் 2. நாள்: 07.01.2012.
திருவள்ளுவராண்டு 2042.

படிக்கப்பட்டவை.

1. அரசாணை (நிலை) எண் 28, பள்ளிக் கல்வித் துறை, நாள் 10.2.2010.
2. அரசுத் தேர்வுகள் இயக்குநரின் கடிதம் ந.க.எண்.043476/பி1/11, நாள் 29.9.2011.
3. Madras Dyslexia Association, T.Nagar, Chennai-17 கடித நாள் 29.6.2011.

------

ஆணை :-

அரசுத் தேர்வுகள் துறையால் நடத்தப்படும் மேல்நிலைத் தேர்வு, எஸ்.எஸ்.எல்.சி., ஓ.எஸ்.எல்.சி, மெட்ரிக், ஆங்கிலோ – இந்தியன் மற்றும் ஈ.எஸ்.எல்.சி. பொதுத் தேர்வுகளில், உடல் ஊனமுற்ற, கண்பார்வையற்ற, காது கேளாத மற்றும் வாய்பேச இயலாத, எதிர்பாராத விதமாக கைமுறிவு ஏற்பட்ட, மனவளர்ச்சி குன்றிய மற்றும் டிஸ்லெக்சியா குறைபாடுள்ள மாணவர்கட்கு தேர்வெழுத அவரவர்கள் குறைபாட்டின் தன்மைக்கேற்ப, தேர்வு எழுத சொல்வதை எழுதுபவர் நியமனம், தேர்வு எழுத கூடுதல் ஒரு மணி நேரம், இரு மொழிப் பாடங்களில் ஏதேனும் ஒரு மொழிப் பாடம் தேர்வு எழுத விலக்கு அளித்தல் போன்ற பல்வேறு சலுகைகள் வழங்கப்பட்டும் இவ்வாறு வழங்கப்படும் சலுகைகள் மற்றும் அச்சலுகைகள் வழங்குவதற்கான நிபந்தனைகள் அனைத்தும் தொகுக்கப்பட்டு மேலே ஒன்றாவதாக படிக்கப்பட்ட அரசாணை (நிலை) எண் 28, பள்ளிக் கல்வித் துறை, நாள் 10.2.2010ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. மேலே இரண்டில் படிக்கப்பட்ட அரசுத் தேர்வுகள் இயக்குநரின் கடிதத்தில் மேலே ஒன்றாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் டிஸ்லெக்சியா மற்றும் நரம்பியல் கோளாறு உள்ள தேர்வர்களுக்கு பத்தி 4 (5)ல் வழங்கப்பட்ட நிபந்தனைக்கு திருத்தம் செய்து ஆணை வழங்குமாறு அரசை வேண்டியுள்ளார். அரசுத் தேர்வுகள் இயக்குநரின் கருத்துருவினை ஏற்று மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணை பத்தி–4, (5)க்கு கீழ்க்கண்ட திருத்தம் வெளியிடப்படுகிறது :–

## திருத்தம்

‘‘டிஸ்லெக்சியா குறைபாடு மற்றும் நரம்பியல் கோளாறு உள்ள மாணவர்களுக்கு அத்தகைய குறைபாடுகளுக்கான அரசு மருத்துவர்கள் / மனோதத்துவ நிபுணர்கள் அடங்கிய அரசு மருத்துவக்குழு வழங்கும் சான்றிதழ், பாட ஆசிரியர்கள் மற்றும் சிறப்பு ஆசிரியர்களின் பரிந்துரைச் சான்றிதழ் அல்லது தன்னார்வ தொண்டு நிறுவனமான Madras Dyslexia Association வழங்கும் சான்றிதழ் பெற்று சமர்ப்பித்தல் வேண்டும்’’

அரசாணையின் ஆங்கிலக் கூற்றின் பத்தி 4(5)க்கு கீழ்க்கண்டவாறு திருத்தம் வெளியிடப்படுகிறது.

**Revised**

"The candidates having deficiency of dyslexia and neuroses problems should get a certificate from the Government Medical Council consisting of Doctors / Psychologist for the above said deficiencies and also a certificate from their teacher and Special Teachers or a certificate issued by Madras Dyslexia Association (Non Government Organization) recommending for the same."

(ஆளுநரின் ஆணைப்படி)

**தி. ஸ்ரீ. ஸ்ரீதர்,**
**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.**

பெறுநர்
அரசுத் தேர்வுகள் இயக்குநர், சென்னை–6.
பள்ளிக்கல்வி இயக்குநர், சென்னை–6.
தொடக்கக்கல்வி இயக்குநர், சென்னை–6.
மெட்ரிக்குலேசன் பள்ளி இயக்குநர், சென்னை–6.
ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்குநர்,
சென்னை–6.
சமூக நலத்துறை இயக்குநர், சென்னை–5.
ஊனமுற்றோருக்கான மாநில ஆணையர்,
15/1 மாதிரிப்பள்ளி ரோடு, சென்னை–6.

நகல்
சமூக நலத்துறை, சென்னை – 9.
சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை, சென்னை – 9.
மாண்புமிகு பள்ளிக் கல்வி அமைச்சர் அவர்களின் நேர்முக உதவியாளர்,
சென்னை–9.
Madras Dyslexia Association,
15 சாம்பசிவம் தெரு,
தி.நகர், சென்னை–17.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.